## 2020ம் ஆண்டு கருபொருள்: குணமளிக்க மகிழ்ச்சியுடன் அனுப்பப்படுதல்

அ.தி.ச. மார்ச் மாத சிந்தனை மடல்: கடவுள் உங்களுக்குள் தயவை கண்டடைந்துள்ளார்
கவனம்: கடவுளே நம்மை தூதுரைப்பணிக்கு அனுப்புகிறார்
நிகழ்வு: மங்களவார்த்தை அறிவித்தல்

---

***அறிமுகம்:***

நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் அன்பாகவும் நீதியாகவும் இருக்கிறார். ஆட்டிடைச் சிறுவன் தாவீது அரசராக்கப்பட்டதுபோல மகாமனிதர்களில் ஒருசிலருக்கு மாபெரும் கடமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிலர் திறன்குறைவு உள்ளவர்களாக இருப்பதால் அவர்களுக்கு இலகுவான பொறுப்பு வழங்கப்படுகிறது. மரியாள் கன்னியாக இருக்கும் போதே கடவுளின் அன்னையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அருள்மிகப் பெற்றவரே "வாழ்க", இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்: அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். மரியாள் மிகவும் கலக்கமுற்றாள், எனினும் கடவுள்மீது நம்பிக்கை கொண்டார், "உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என கீழ்படிதலுடன் பதிலுரைத்தார்.

**ஆரம்ப பாடல்:**

**இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்**
**ஆவலாய் தன் கரத்தை நீட்டி அன்பாய் அழைக்கிறார்** - 2

1. **இறைவனின் குலமே இயேசுவின் உள்ளமே** - 2
**இதய அமைதி இனிதே அடைய இயேசு அழைக்கிறார்** - 2

2. **கவலை மிகுந்தோரே கலங்கித் தவிப்போரே** - 2
**கவலை நீக்கிக் கலக்கம் போக்கக் கடவுள் அழைக்கிறார்** - 2

அ.தி.ச. உறுப்பினர் ஒருவர் **ஆரம்ப செபம்** கூறுவார்.

**உரையாடல்**

குவாதலுப்பே அன்னையின் (*Our Lady of Guadalupe*) திருக்காட்சியானது உலகின் மிகவும் புகழ்மிக்கதாக கருதப்படுகிறது. லோரே பாரம்பரியத்தின்படி, 1531 ஆம் ஆண்டில் இறையன்னை அவர்கள், ஜுவான் டியாகோ என்ற பெயர்கொண்ட விவசாயிக்கு, இன்றைய மெக்சிக்கோ மாநகருக்கு அருகிலுள்ள குன்றின்மேல் காட்சியளித்து, தமக்கு ஒரு திருத்தலம் கட்டும்படி கேட்டுக்கொண்டார். பின்னர் மரியாளின் காட்சி குறித்து, ஜுவான் டியாகோ உள்ளூர் ஆயருக்கு இரண்டு முறை தெரிவித்தபோதும் அவர் அதனை நம்பவில்லை. இரண்டாவது முறை கூறும்போது, ஆயர் தமக்கு சான்று தேவை என கேட்டுக்கொண்டார். டிசம்பர் மாதம் 12ம் திகதி காலை பொழுதில் அக்காட்சி ஜுவான் டியாகோவிற்கு மீண்டும் தோன்றி, குன்றின் உச்சிக்கு சென்று பூக்களை சேகரித்து வரும்படி அவர் பணிக்கப்பட்டார். இது வழக்கத்திற்கு மாறானதாக இருந்தது, ஏனெனில் அது குளிர்காலமாக இருந்தப்படியால், அப்பருவத்தில் மலர்கள் பூத்திருக்கமுடியாது.

இருப்பினும், மரியாளின் அறிவுறுத்தலை பின்பற்றி சென்றார். அங்கே காஸ்டிலியன் வகை ரோஜாப்பூக்கள் அணிஅணியாக பூத்திருப்பதை ஜுவான் கண்டார். அப்பூக்களை அவரது மேலாடையில் அடுக்கி வைக்க "அன்னையும்" உதவிசெய்தார். பின்னர் அவர் ஆயரை திரும்பவும் சந்திக்கச் சென்றார். ஜுவான் டியாகோ ஆயரிடம் தமது மேலாடையை காட்டியபோது ரோஜா பூக்கள் வெளியே வந்து விழுந்தன. அப்போது மேலாடையின் உள்ளே கன்னி மரியாளின் திருவுருவத் தோற்றம் தென்பட்டது. அதுமுதலாக அத்தோற்றம் குவாத்தலூப்பே அன்னையின் திருவுருவமாக அறியப்பட்டு வருகிறது.

கடவுள் கண்ணுக்குப் புலப்படாதவர், கடுமையாக நடந்துகொள்பவர். நமக்கு தொலைதூரத்தில் உள்ளவராக இருக்கிறார் என்ற மனப்பான்மையில் நம்மில் பலர் வளர்ந்து கொண்டிருந்த போதும், குவாத்தாலூப்பே அன்னை பார்க்கக் கூடியவராகவும் தொட்டுணரக் கூடிய சாயலை கொண்டவராகவும் விளங்குகிறார். மேலும் எல்லாரையும் அன்பு செய்து மன்னிக்கும் அன்னையின் திருவுருவமாக திகழ்கின்றார்.

***சிந்தனை:***

*உங்களுக்கு அடுத்திருப்போரிடம் கலந்து பேசவும்.*

- ✧ *ஜுவான் டியாகோவிற்கு நமது அன்னை ஏன் காட்சி அளித்தார் என நீங்கள் நினைக்கிறீர்கள்?*
- ✧ *என்ன புதுமை நடந்தது?*



**ஆய்ந்தறிதல்**

*திருத்தூதர் பணி 2:1-4*



1 பெந்தெகொஸ்தே என்னும் திருநாளின்போது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்.

2 அப்பொழுது திடீரென, பெருங்காற்று வீசுவதுபோன்ற இரைச்சல் வானத்தினின்று உண்டாகி, அவர்கள் இருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

3 நெருப்புப்போன்ற நாவுகள் அவர்களுக்குத் தோன்றிப் பிளவுண்டு, ஒவ்வொருவர்மேலும் வந்து தங்கின.

4 எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, ஆவியானவர் அருளியபடி அயல்மொழிகளில் பேசத்தொடங்கினர்.

***சிந்தனை:***

- வாசகத்தை உரத்த குரலில் வாசித்து. திறந்த மனதுடன் செவிமடுக்கவும்.
- ஒரு வார்த்தை அல்லது சொற்றொடர் உங்கள் மனதை தொடும்வரை அல்லது ஏவப்படும் வரை அமைதியுடன் தனியாக படிக்கவும்.
- *வார்த்தை அல்லத சொற்றொடர் வாயிலாக பரிசுத்த ஆவியானவர் என்ன கூறுகிறார்?*
- *பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பியுள்ளார் என்பதை உணர்ந்து குணமளிப்பு தேவைபடுவோருக்கு மகிழ்ச்சியுடன் சென்று குணமளிப்பீர்களா?*
- *தூய ஆவியாரின் வல்லமை குறித்து நீங்கள் கொண்ட உணர்வை சிறு குழுக்களில் பகிரவும்.*

**செயல்**

*குணமளிக்க செல்லவும், குணமளிப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்ப வேண்டுமென ஆண்டவராகிய இயேசுவிடம் மன்றாடவும்.*

***முடிவு செபம்***
அ.தி.ச. குழுவின் மற்றொரு உறுப்பினர் **முடிவு செபத்தை** கூறுவார்.

***முடிவு பாடல்:***

**மாசில்லாக் கன்னியே மாதாவே உம்மேல்**
நேசமில்லாதவர் நீசரே யாவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே -2 (2)

1. மூதாதை தாயாசெய் முற்பாவ மற்றாய்
ஆதியில் லாதோனை மாதே நீ பெற்றாய் - வாழ்க ...

2. உம் மகன் தாமே உயிர் விடும் வேளை
என்னை உன் மைந்தனாய் ஈந்தனரன்றோ - வாழ்க